மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ பெருமாள், வினாவாகக் கேளுங்கள்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் மோகனூர் சுகர் பேக்டரிக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இங்கிருந்து அங்கு செல்ல வேண்டுமென்றால் 100 கிலோமீட்டர் ஆகிறது. இங்கு சுமார் 500 ஏக்கர் நிலத்திலே கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அந்த வகையிலே, அக்குறையினைத் தீர்ப்பதற்கு இங்கு சர்க்கரை ஆலை வந்தால் நன்மையாக இருக்கும். என்பதைக் கருத்திற் கொண்டு—என்னுடைய தொகுதி மக்கள் தொடர்ந்து என்னிடத்திலே கூறிக் கொண்டிருக்கிறார்கள்—அடுத்த நிதியாண்டிலாவது, மீண்டும் பரிசீலனை செய்து, சர்க்கரை ஆலையைக் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான ஏற்காடு, அதிகமான மலைப் பகுதியையும், காட்டுப்பகுதியையும் கொண்டிருக்கிற பகுதி. அங்கே கரும்பு சாகுபடி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் அறவே இல்லை. மாண்புமிகு உறுப்பினர், அங்கே ஐநூறு ஏக்கர் நிலத்தில் கரும்பு விளைவிப்பதாகச் சொன்னார்கள். ஒரு சர்க்கரை ஆலை துவக்கப்பட வேண்டுமென்றால் குறைந்த பட்சம் 15,000 ஏக்கரிலாவது அங்கே கரும்பு பயிரிடப்பட வேண்டும், காரணம் ஒரு நாளைக்கு 2,500 டன் கரும்பைப் பிழிந்தால் தான் ஆலை பொருளாதார ரீதியில் சாத்தியமாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் வெறும் 500 ஏக்கரை மாத்திரம் வைத்துக் கொண்டு ஆலை அமைப்பது என்பது நடைமுறை சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 73, திரு கே. கந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

73—

விழியிழந்தோர் பள்ளிக் குழந்தைகளின் உணவுக்காகும் தொகையை உயர்த்துதல்

*20302—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

விழியிழந்தோர் பள்ளிக் குழந்தைகளின் உணவுக்காக அளிக்கப்படும் தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடல் ஆரோக்கியமாக இருக்கின்றவர்களுக்கே விலைவாசி உயர்வு காரணமாக வாழ்க்கை நடத்துவது கஷ்டமாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் விழி இழந்த குழந்தைகளுக்கு உணவுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை போதுமானதாக இல்லை. விலைவாசி உயர்வைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கு உணவுக்காக வழங்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேதான் இதுவரை பல ஆண்டு காலமாக மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 90 ரூபாய் என்றிருந்த உணவுச் செலவிற்கான தொகையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 120 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அதைப் போல, தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகளில் பல ஆண்டுக் காலமாக 30 ரூபாய்தான் உணவுத் தொகையாகக் கொடுத்து வந்தார்கள். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த 30 ரூபாயை 90 ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தற்சமயம் இக் கேள்விக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழி இழந்த குழந்தைகள் இசை ஞானத்தில் அபார சக்தி உடையவர்களாக இருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கு இசைக் கருவிகள் வாங்கிக் கொடுத்து, அரசு நிகழ்ச்சிகள் நடக்கின்ற பொழுது, அந்த விழி இழந்த குழந்தைகள் இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி, உணவுத் தொகையை உயர்த்துவது பற்றி, ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற இந்தக் கேள்விக்கும் பதிலளிக்கின்றேன்.

ஏற்கனவே விழி இழந்தோர் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள், இசையிலே தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கின்ற மாணவர்கள் பேண்டு போன்ற வாத்தியங்களைக் கொண்டு அரசு நிகழ்ச்சி களில் இப்பொழுதும் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள். தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. சிங்கை கோவிந்தராசு.

<u>திரு. சிங்கை. கோவிந்தராசு:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு தமிழகத்தி னுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே இந்தத் துணைக் கேள்வியில் நன்றியை யும் கூறிக் கொள்ள வாய்ப்புக் கேட்டுக் கொள்கிறேன். என் னுடைய கோவை மாவட்டத்திலே சிங்காநல்லூர் தொகுதியிலே இருக்கக் கூடிய வசந்தா மில் ஆலை கடந்த 15 ஆண்டுகளாக மூடியிருந்தது. அந்த ஆலையில் சுமார் 1,531 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தார்கள். கிட்டத்தட்ட அவர்களுடைய குடும் பத்தில் 10,000 பேர்கள் இருப்பார்கள். அந்த ஆலை மூடியிருந்த தால் பல பேர் வறுமையால் வாடி இறந்து போய்விட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் புரட்சித் தலைவி அவர்களிடத்தில்- (குறுக்கீடு) நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன், அவர் களிடம்-வைத்த வேண்டுகோளை ஏற்று, அன்றைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு ரகுபதி அவர்களும் இன்றைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில், அவர்களுடைய கட்டளைக்கிணங்க, இன்று அந்த ஆலையில் ஏ.எஃப்.ஆர்., பி.எஃப்.ஆர். போன்ற சலுகைகள் அனைத்தையும் கொடுத்து, அந்த ஆலை திறக்கப்பட இருப்பதற்கு என்னுடைய சிங்காநல்லூர் தொகுதி மக்களின் சார்பாகவும், கோவை மாவட்ட தொழிலாளர்கள் சார்பாகவும், அண்ணா பஞ்சாலை சங்கத்தின் சார்பாகவும் உளமார்ந்த நன்றியினை டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளும் இதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துணைக் கேள்விக்கு விடையளிப்பாரா என்றும் அறிய விரும்புகின்றேன். கடந்த ஆண்டில் விழி இழந்த பள்ளிக் குழந்தைகளுக்கு உணவுக்காக ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு எவ்வளவு; புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அவர்களின் வளர்ச்சிக்காக ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலங்களில் 1991 வரை ரூ. 137.74 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1992-93 இல் அது 170.80 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1993-94 இல் ரூ. 221.54 இலட்சமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது.

இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு மட்டும்தான் அதிக அளவிற்கு பட்ஜெட்டிலே ஊனமுற்றவர்களுக்காக ஒதுக்கி யிருக்கிறது என்பதற்கு மத்திய அரசே தமிழக முதலமைச்சரை பாராட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் விழியிழந்த வர்களுக்கு அரசு சார்பிலே மாதம் 120 ரூபாய் அதாவது ஒரு நாளைக்கு 4 ரூபாய் என்று சொன்னார்கள். தொண்டு நிறுவ னங்களுக்கு 90 ரூபாய், — ஒரு நாளைக்கு 3 ரூபாய் என்று சொன்னார்கள். தொண்டு நிறுவனங்கள் நடத்துகின்ற அந்த விடுதிகளிலே நல்ல மனம் படைத்தவர்கள் உதவிசெய்கிறார்கள். அதனால் குழந்தைகளுக்கு ஓரளவுக்கு நல்ல உணவைத்தருகிறார் கள். அரசு நடத்துகின்ற அந்த இல்லங்களிலே 4 ரூபாயிலே ஒரு நாளைக்கு 3 வேளை உணவு கொடுத்து அவர்களை பரா மரிக்க வேண்டியிருக்கிறது. 90 ரூபாயை 120 ரூபாயாக புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே, மேலும் அவர்கள் விழி யிழந்தவர்கள், வாழ்க்கையிலே — ஒரு மிகப் பெரிய மனித சமுதாயத்திலே பார்வையிழந்தவர்கள் என்று வருகிற போது, அவர்களுடைய சுகங்கள் எல்லாம் இழக்கப்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். நல்ல உணவையாவது கொடுப்பதற்கு இந்த அரசு மனமுவந்து மேலும் அந்தத் தொகையை கூட்டிக்கொடுப்ப தற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் நடத்தப்படுகின்ற இந்த ஊனமுற்றோர் பள்ளிகளுக்குக் கூட தொண்டு நிறுவனங் களைச் சார்ந்தவர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள் நிரம்ப உதவியை செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயே காய்கறிகள் பயிரிடப்படுவதால் சுத்தமான காய்கறிகள் அவர்களுக்கு இலவச மாக பெறப்பட்டு அங்கே சமைத்து வழங்கப்படுகிறது. உணவு நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, தற்சமயம் இக்கோரிக்கைக்கு இடமில்லை. எதிர்காலத்தில் இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய ஒளிமயமான இந்தத் தமிழகத்தை காணமுடியாமல் இருக்கின்ற விழியிழந்த மாணவர்களுக்கும், புரட்சித் தலைவருடைய சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்ற புரட்சித் தலைவி அவர்கள் கருணை உள்ளத்தோடு அமலாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் அரசால் கொடுக்கப்படுகின்ற பணத்தால்தான் அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

74—

மாநிலக் கல்லூரியின் விக்டோரியா விடுதியை செப்பனிடுதல்.

*9024—திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்கள் தங்கும் விக்டோரியா விடுதி பழுதடைந்துள்ளதை சீர்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்கள் தங்கும் விக்டோரியா மாணவர்கள் விடுதிக் கட்டிடத்திற்குத் தேவையான சிறிய அளவிலான பராமரிப்பு மற்றும் பழுது சரி செய்யும் பணிகள் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. பெரிய அளவிலான வேண்டியப் பணிகளை செய்து முடிக்க உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூபாய் 20 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு பொதுப்பணித் துறை அனுப்பியது. இதில் மேலொப்பமிட்டு பொதுப்பணித் துறைக்குக் கல்வித் துறை அனுப்பியிருக்கிறது. விரைவில் பணிகளை முடிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS